# தமிழர்களின் வீரக்கலைகள்

## வினாவிடை

**1. ஐவகை நிலங்கள் யாவை?**

- குறிஞ்சி (மலை)
- முல்லை (காடு)
- மருதம் (வயல்)
- நெய்தல் (கடல்)
- பாலை (மணல்)

**2. தமிழர்களின் வீரக்கலைகளுள் இரண்டைக் குறிப்பிடுக.**

- ஏறுதழுவுதல்
- சிலம்பாட்டம்
- வில்வித்தை
- மல்யுத்தம்
- சடுகுடு

**3. ஏறுதழுவுதல் என்றால் என்ன?**

- ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கும்.
- ஏறுதழுவுதல் என்பது காளையைத் தழுவி, அதன் வீரத்தை அடக்குவதாகும்.

**4. சிலம்பாட்டம் - பெயர்க்காரணம் தருக.**

- சிலம்பு என்றால் ஒலித்தல் என்பது பொருள்.
- கம்பு சுழலும்போது ஏற்படும் ஓசையை அடிப்படையாகக் கொண்டே சிலம்பம் எனப் பெயரிட்டனர்.

**5. வல்வில் ஓரியின் வில்லாற்றல் சிறப்பைக் கூறுக.**

“வல்வில் ஓரி வேட்டையாட காட்டிற்குச் சென்ற போது, எய்த அம்பு பெரிய யானையின் மீது பாய்ந்து, பெரும்புலியைக் கொன்று, கலைமானைச் சாய்த்து, பன்றியின் மேல் பாய்ந்து, உடும்பின் மீது தைத்து நின்றது” என வன்பரணர் பாடி மகிழ்கிறார்.